த
மி
ழ
ன

# விடுதலை

இதழ்:- 9  தைமாதம் (15.1.84)  மாதம் இருமுறை பக்கங்கள் - 6

## எமது எண்ணம்

### மாணவர் போராட்டம் கூர்மையடைகின்றது.

நமது பத்திரிகைக் குழுவினர் நமது பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாநோன்பு ஆரம்பித்த முதல் தினமே அதாவது 31.12.83 அன்று இடம்பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களைச் சந்தித்து அவர்களுக்கு எமது பூரண ஆதரவைத் தெரிவித்ததோடு 4.1.84 அன்று அவர்களோடு கூட அமர்ந்து முழுநாள் உண்ணாவிரதத்திலும் கலந்து கொண்டோம். ஆரம்பத்தில் அவர்கள் கட்டம் கட்டமாக ஆரம்பித்த உண்ணாவிரதம் இன்று புதிய முனைப்பை அடைந்து, சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கின்ற ஒரு அனிச்சலான போராட்டவடிவத்தைப் பெற்று கூர்மையடைந்துள்ளது. நாளும் பொழுதும் தீவிர போராளிகளாக அவர்கள் மாறிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற சிங்கள இனவெறியர்களின் கொலைக் களத்தில் நமது பெறுமதி மிக்க நூல்கள், பாடக் குறிப்புகள், உடுபுடவைகள், ஏனைய உடைமைகள் யாவற்றையும் பறிகொடுத்துவிட்டு தமது உயிரை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு தாயகம் வந்து சேர்ந்தனர் எங்கள் தமிழ் மாணவர்கள். இந்த ஜூலை கலவரங்களுக்கு முன்னரேயே சிங்கள மாணவர்களால் மொறட்டுவையிலும், பேராதனையிலும் தமிழ் மாணவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. தென்னிலை பல்கலைக்கழகங்களில் குழப்பநிலை ஏற்பட்டு, சில பல்கலைக் கழகங்கள் நேர காலத்துடன் மூடப்பட்டுவிட்டன. அவ்வாறு சில பல்கலைக் கழகங்கள் மூடப்பட்டு கிடந்த நிலையிலும் கூட பல தமிழ் மாணவர்களும் விரிவுரையாளர்களும் ஜூலை கலவரத்தின் போது கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர். பலர் மிகமோசமாக தாக்கப்பட்டு பலத்த காயங்களுக்குள்ளானார்கள். பல்கலைக்கழகங்கள் மட்டும் நேரகாலத்துடன் மூடப்படாமலிருந்திருக்குமானால் கொலை செய்யப்பட்ட மாணவர்களது எண்ணிக்கை மேலும் பன்மடங்காக இருந்திருக்கும்.

இன்று நமது மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் அவர்களுக்கு மட்டும் உரிய பிரச்சனையன்று; அது எமது முழு சமுதாயமும் எதிர்நோக்கும் பிரச்சினையாகும். அதாவது இன்று தமிழருக்கு எங்குமே பாதுகாப்பில்லை. தமிழீழத்தில் அரச பயங்கரவாதம் ஊழிக் கூத்தாடுகின்றது. தென்னிலங்கையிலோ சிங்களக் காடையர்களின் சிங்கள பௌத்த பயங்கரவாதம் தலைவிரித்தாடுகின்றது. தமிழனின் உயிருக்கு எங்குமே பாதுகாப்பில்லை. இந்த நிலையில், அதாவது தமிழனின் உயிருக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாத நிலையில், உயர்கல்வி என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இப்பிரச்சினை இன்று பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் மட்டுமன்றி வருங்காலத்தில் பல்கலைக்கழகப் படிப்பை மேற்கொள்ள விரும்பும் சகல மாணவர்களும் எதிர்நோக்கும் பிரச்சினையாகும். ஆகவேதான் தமிழ்ப் பெற்றோர்கள் இன்றைய தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை எந்த வகையிலும் முழுத்தமிழினமும் எதிர்நோக்கும் பிரச்சினைகளிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கக் கூடாது என்கிறோம்.

ஒவ்வொரு பெற்றோரும் இப்பிரச்சினையைத் தமது சொந்தப் பிரச்சினையாக எடுத்து இப்பிரச்சினைக்கு ஒரே தீர்வாக பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் தமிழ்ப் பகுதிகளுக்கு மாற்றக் கூடியதான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பட்டதாரி மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒரு சங்கம் ஒன்றை அமைக்கவேண்டும். இப்படியான சங்கம் எதுவுமே இப்போது கிடையாது. அவ்வாறான ஒரு சங்கம் அமைத்து மாணவர்களது பெற்றோரும், மாணவர்களது உரிமைக்காகப் போராட முன்வர வேண்டும். மாணவர்களது போராட்டத்தில் பங்கெடுக்கவேண்டும். இன்று மாணவர்கள் மேற்கொண்டிருக்கும் சாகும்வரையிலான போராட்டம் அவர்களுக்காக அல்ல; வருங்கால அனைத்து தமிழ் மாணவர்களுக்காகவும் தான், தமது உயிரைப் பணயமாக வைத்து இன்று போராட்டத்தில் குதித்து இருக்கிறார்கள். இதை ஒவ்வொருவரும் நன்குணர்ந்து கொள்ளவேண்டும். அவர்களது நீதியான, நியாயமான கோரிக்கைகளுக்குச் சகலரும் [illegible] முன்வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எமது பெற்றோர்கள், மாணவர்கள் இதனை எவ்வளவு தூரம் உணர்ந்துள்ளார்கள் என்பது கேள்விக்குறியாகவுள்ளது. மாணவர்கள் சிலர் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களுக்குச் சென்றுள்ளதாக அறிகிறோம். பெற்றோர்கள் சிலரே வற்புறுத்தி மாணவர்கள் சிலரை அங்கு அனுப்பி வைத்திருப்பதாகவும், தெரிகிறது. இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயம் மட்டுமல்ல, மாணவர்களது நீதியான, நியாயமான போராட்டங்களை மழுங்கடிக்கச் செய்யும் ஒரு செயலாகவே நாம் கருதுகிறோம். இத்தகைய சுயநலவாதப் பெற்றோர்களும், மாணவர்களும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் ஐந்தாம் படைகளாகவும், பத்தாம் பசலிகளாகவும் கணிக்கப்படவேண்டியவர்களாவார்கள், என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இது ஒருபுறமிருக்க, வட்டமேசை மகாநாடு என்று கூறிக்கொண்டு, தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகக் கூறிக் கொண்டு அரசாங்கம் ஏதோமகாநாடு ஒன்றைக் கூட்டியுள்ளது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் ஒன்று கல்வி சம்பந்தப்பட்ட பிரச்சினை. கல்விப் பிரச்சினை காலத்திற்குக் காலம் புதிய வடிவம் பெறுவதுண்டு. இன்று மகாநாடு நடக்கும் வேளையில் பல்கலைக்கழக மாணவர்களது பிரச்சினையும் ஆராயப்பட விருப்பதாகக் கூறப்படுகிறது. இப்படி ஒருபுறம் நடக்க, மறுபுறம் சகல பல்கலைக்கழக மாணவர்களும் குறிப்பிட்ட திகதிக்குள் பல்கலைக்கழகங்களுக்குத் திரும்பிவிடவேண்டும் என காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் தமிழ் மக்களது பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறிக் கொள்ளும் வேளையில், அரசின் ஒரு அங்கமான உயர்கல்வி அமைச்சு ஒரு காலக்கெடு விதித்திருப்பது எந்தவகையில் நியாயமானது. அதுவும் மகாநாடு கூட்டும் சிறீ-லங்கா ஜனாதிபதியே உயர்கல்வி அமைச்சராகவும் இருக்கிறார். அப்படியிருக்க வட்டமேசைக்கு முன்னால் ஒரு முகமும், உயர்கல்வி அமைச்சில் இன்னுமொரு முகமும் போட்டுச் செயல்படுகிறாரா? அல்லது அரசாங்கத்தின் நோக்கங்கள், திட்டங்களுக்கு விரோதமான முறையில் சில ஸ்தாபனங்கள் திட்டமிட்டே செயல்படுகின்றனவா? அல்லது அரசாங்கத்தினுள்ளேயே அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டிருக்கிற தீயசக்திகள், தமது தமிழின விரோத நடவடிக்கைகளுக்குத் தூபம் போட்டு வருகின்றனவா?

ராஜாங்க அமைச்சின் செயலாளர், வட்டமேசைமகாநாட்டிற்கு ஊறு விளைவிக்கக் கூடிய செய்திகளை வெளியிட வேண்டாம் என்றும், பங்கம் ஏற்படுத்த வேண்டாம் என்றும் கூறுகிறார். ஆனால் உயர்கல்வி அமைச்சின் செயலாளரோ மாணவர்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இப்படி ஒவ்வொருவரும் முன்னுக்குப்பின் முரணாக நடந்து கொள்கிறார்கள். இன்று எல்லாமாக எத்தனை அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது.

மாணவர்களது பிரச்சினைபற்றி தமிழ் சமூகத்தின் தலைவர்களென்று கூறிக் கொள்வோர் கவனத்தில் எடுக்கவேண்டும். தமிழ்ப் பெற்றோர்கள் இதைப் பற்றி கருத்தில் எடுக்காதுவிடின் வருங்கால சமுதாயத்தின் அழிவுக்கே அவர்கள் காரண கர்த்தாக்களாகவிருந்த பழியைச் சுமந்து கொள்ள வேண்டியேற்படும் என்பது மட்டும் நிச்சயம்

- ஆசிரியர் -

சட்டமேதை வி.எல். புள்ளநாயகத்துக்கு தமிழீழ மக்களின் கண்ணீர் அஞ்சலி

அமரர் வி.எல். புள்ளநாயகம் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பல ஆண்டுகள் கடமையாற்றியவர். பெரிய பதவிகள் எல்லாம் அவரைத் தேடிவந்த பொழுது ஏற்க மறுத்தார். காரணம் நீதியை நிலைநாட்ட சட்டமா அதிபர் பதவிதான் பொருத்தமென நினைத்தார். ஆனால், அப்பதவி மறுக்கப்பட்டபொழுது, அவர் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து விலகிக் கொண்டார்.

புள்ளநாயகம் அவர்கள் தமிழ்மொழியைக்கற்றவருமல்லர்; தமிழைப் பேசுபவருமல்லர். ஆனால் தமிழை, தமிழரின் கலாச்சாரத்தை, பண்பாட்டை, வரலாற்றை நன்றாக அறிந்தவர். தமிழ் வாலிபருக்கு எதிரான நூற்றுக்குமேற்பட்ட வழக்குகளில் பணம் பெறாது ஆஜராகி வாதிட்டார். தமிழினத்தைச் சேர்ந்த சில சட்டத்தரணிகள் தமிழ் இளைஞர்களின் வழக்குகளில் வாதிட சில தொகையாகுதல் கொடுக்கவேண்டும் என்று கூறி, மற்றைய தேவையில்லை எனக்கூறி தனது வழக்குகளைக் கட்டித்திய பெரும் தமிழ்ச் சமுதாயத்திற்குச் செய்யும் சேவைக்கு கூலி எனக்குத் ^ மற்றயவர்களைக்குறிக்கப்பட்ட நேரத்தில், முன் அனுமதி பெற்றுத்தான் காணமுடியும். கதைக்க முடியும். ஆனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் வாலிபர்களின் மனுக்கள் யாவற்றிற்கும் தட்டிய நேரமெல்லாம் கதவைத்திறந்து எல்லா உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கியவர் எங்கள் சட்டமேதை புள்ளநாயகம் அவர்கள். காலை ஒன்பது மணிக்குத் தொலைபேசிமூலம் " ஒன்பதரை மணிக்கு நீதி மன்றத்தில் நில்லுங்கள் " என்று கூறினால் போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவித தடையுமின்றிக் குறிக்கப்பட்ட நேரத்தில், மன்றில் நிற்பார். மன்றில்தான் என்னவிடயம் என்று கேட்டு உடனடியாகத் தன்னைத் தயார் செய்து கொள்வார். காண்டீபன் தனது காண்டீபத்தை வளைத்து குறி தவறாது கணைகளை எய்வது போல, சட்ட வாதங்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே செல்வார். தர்மயுத்தத்தை எந்த நேரமும், எவ்விடத்திலும் தொடங்கக் கூடிய ஆற்றலையும், வல்லமையையும் பெற்றிருந்தார். அப்படியே யாருக்கும் அஞ்சாது, தொடை நடுங்காது நடத்தியும் காட்டினார். தமிழ் இளைஞர்களின் இதயத்தில் குடி கொண்ட சட்டவல்லுனர் புள்ளைநாயகம் அவர்கள்.

ஜுலை மாதக் கலவரத்தின் பின் நகுலேந்திரன் என்ற வாலிபர் கைது செய்யப்பட்டார். இவ்வாலிபரின் சார்பாக ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யவேண்டியிருந்தது. அப்பொழுது தமிழ்ச் சட்டத்தரணிகள், தங்கள் உயிருக்கே ஆபத்தென்று எண்ணித் தயங்கினார்கள். அப்பொழுது திரு. புள்ளைநாயகத்தை அணுகிய பொழுது 'இருப்பது ஓர் உயிர்தான், அதனை இழப்பதுவும் ஒரு நாள்தான்', நியாயத்திற்காகப் போராடுவதற்கும், எமது இன உயர்ச்சிக்குப் பாடுபடுவதற்கும் பயப்படக்கூடாது என்று சொல்லி தமிழ் சட்டத்தரணிகளை தட்டிக் கொடுத்து வாலிபர் நகுலேந்திரன் வழக்கில் ஆஜராகச் செய்தார். கடைசி மூச்சுவரையும் தமிழ்ச் சமுதாயத்தின் நன்மைக்காக அரும்பாடுபட்டார்.

தமிழ் மக்களுக்குச் சட்டத்துறையில் ஒளிகாட்டி, பாதையை நெறிப்படுத்திய கலங்கரை விளக்கம் சாய்ந்துவிட்டது. சுதந்திரத்தை மதித்த, மனிதன் சுதந்திரமாக வாழ வேண்டும், அதற்கான கோட்பாடுகளைச் செயல்படுத்த வேண்டுமென்று ஆர்ப்பரித்த வீரமகன் மறைந்துவிட்டார். உரிமைக்காக ஒலித்த அவருடைய குரல் ஒலியாது விட்டாலும் அவரது நாமம் மக்களின் சிந்தனையில், உணர்வில் நிலைத்து நிற்கும்.

அவரது ஞாபகச் சின்னமாக மணிமண்டபம் எழுப்பி அவரது நாமத்தை என்றென்றும் நிலைக்கச் செய்ய வேண்டியது தமிழீழ மக்களின் தலையாய கடமையாகும்.

## மாணவர்களின் பெற்றோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இடம்பெயர்ந்துள்ள பல்கலைக்கழக மாணவர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்துள்ள இவ்வேளையில், தென்னிலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு சுமார் 120 தமிழ் மாணவர்கள் சென்றுவிட்டதாக அறிகிறோம். இப்படியான போராட்டம் நடக்கும் வேளையில் தமிழினத்தின் சாபக் கேடான ஒற்றுமையின்மை இங்கேயும் தலைதூக்கிவிட்டது. எந்தவொரு போராட்டமும் ஒற்றுமையின்றிச் செயல்பட்டால், எதிரிக்கே வாய்ப்பாகிப் போய்விடும். போராட்டம் வெற்றிபெற வேண்டுமாயின், அதில் முழுமை பிரதிபலிக்கவேண்டும். இங்கே சாகும்வரை உண்ணாவிரதமிருந்து எமது அறிவுச் செல்வங்கள் மடியும் போது ஒரு சில தமிழர்களின் பிள்ளைகள் பட்டம் பெற்று பதவி வகிக்க முடியும் என்பது பகற்கனவாகும். ஆகையால் இன்னும் காலம் கடந்துவிடவில்லை.

தமிழ்ப் பெற்றோர்களே! உங்கள் அறியாமையால் உங்கள் பிள்ளைகள் தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களுக்குச் சென்றிருந்தால், தயவு செய்து உடனே அவர்களை தமிழீழத்திற்கு வரவழைக்கும்படி தமிழினத்தின் சார்பாக உங்களைக் கரம்கூப்பி வேண்டுகிறோம்.

## தமிழ்ப் பெண் கைது செய்யப்பட்டார்:-

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகலிங்கம் சுலோசனா என்ற 23 வயதுப் பெண் 15.12.83 வியாழக்கிழமை வவுனியாவில் ஒரு பஸ்சில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களால் 14.12.83 அன்று நடாத்தப்பட்ட ஊர்வலத்தால் தொடர்பான துண்டுப் பிரசுரம் ஒன்றைத் தமது உடமையில் வைத்திருந்தமைக்காக இராணுவத்தால் கைது செய்யப்பட்ட இவர், மாங்குளம் இராணுவ முகாமிலும், வவுனியா பொலிஸ் நிலையத்திலும் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். இதன் பின்னர் நான்கு நாட்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் விளக்கமறியலில் வைத்திருந்து விட்டு 19.12.83 அன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருக்கிறார்கள்.

ஜுலைமாதக் கலவரத்தில் சிங்களக் காடையர்கள் மட்டுமன்றி கொள்ளையடிப்பதில் சிங்களப் பெண்களும் ஈடுபட்டனர். வருமானவரி இலாகாவைச் சேர்ந்த உயர்தர நிர்வாக அதிகாரிகள் சிலர் கொலை செய்யப்படவும், சிங்களப் பெண்கள் தூண்டுகோலாகவிருந்துள்ளனர். அவர்கள் எல்லாம் சுயாதீனமாக வாழ்கிறார்கள். எமது மண்ணில், ஒரு துண்டுப் பிரசுரம் வைத்திருந்தமைக்காக ஒரு பெண்ணுக்கு இத்தனை தண்டனையும், கொடுமையும் விதிக்கப்பட்டுள்ளது. இதற்கும் இங்கே பெயர் தர்மிஷ்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டாக்டர் தர்மலிங்கம் வெளியேற்றப்பட்டார்

தமிழீழ விடுதலை அணியின் முன்னாள் தலைவர் டாக்டர். ச. அ. தர்மலிங்கம் அவர்கள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார் என விடுதலை அணியின் தலைமைப்பீடம் பத்திரிகைகள் மூலம் அறிவித்துள்ளது. விடுதலை அணியினர் தற்போது நடைபெற்றுவரும் வட்டமேசை மகாநாடு தொடர்பாக உடன்பாடான கருத்தைக் கொண்டிருக்கவில்லை. குற்றவாளிக் கூண்டில் ஐ. தே. கட்சி நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அப்படியிருக்க அக்கட்சியின் தலைவர் தலைமையில் நடைபெறும் வட்டமேசை மகாநாட்டால் தமிழருக்கு நீதி கிடைக்கப் போவதில்லை என்பதும் விடுதலை அணியின் பலரதும் கருத்தாகவிருக்கிறதெனத் தெரிகிறது. அப்படியிருக்க, விடுதலை அணியின் அடிப்படை இலட்சியத்திற்கு மாறாக விடுதலை அணியின் எவரையுமே கலந்து பேசாமல், தன்னிச்சையாக பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்து இயக்கத்தின் கட்டுப்பாடுகளை மீறியமைக்காக டாக்டர். அவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## வளாகத்தை ஒரு முறை சுற்றிவந்த போது.......

இடம்பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒன்றியம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளவினுள் ஏற்பாடு செய்துள்ள உண்ணாவிரதப் போராட்டம் 31.12.83 அன்று ஆரம்பமானது. 9.1.84 தொடங்கும் இப்போராட்டம் மேலும் தீவிரமடைந்து மாணவர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறார்கள். அவர்கள் தமது மனக்கொதிப்பை அர்த்தமுள்ள, காத்திரமான மொழியில் சுலோகங்களாக்கி பல இடங்களிலும் ஒட்டியிருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை இங்கே தருகிறோம்.

'பல்கலைக் கழகம் படிக்கவே சென்றோம்
கொலைக்களம் என்றால் சென்றிருக்கவே மாட்டோம்.'

'பேரினவாதப் பேரிகை கொட்டுது
மாணவர் ஐக்கியம் நமக்கு முக்கியம்'

'எட்டுக் கல்வி இல்லாது போனாலும்
கூடப் படிப்பவரால் கொலையாகி
நாம் சாக மாட்டோம்.'

"இடம்பெயர்ந்த மாணவர்கள் நாம்
கொலைக் களங்களுக்கு மீண்டும் திரும்பமாட்டோம்."

"சகமாணவர்கள் கொல்லப்பட்டனர்
இன்னும் பலர் தாக்கப்பட்டனர்
அநியாயம் ஒருபுறம் அவமானம் மறுபுறம்
இன்னுமா அங்கே படிப்பைத் தொடர்வது
ஐயோ வேண்டவே வேண்டாம்."

" சிங்கள மாணவர்கள் பரீட்சையில்
தமிழ் மாணவர்கள் புல்தரையில்"

"செங்குருதி ஆறுவல் சேருகும் மண்ணில்
இன்னுமொரு அழைப்பு நமக்கு எதற்கு? "

"கண்கலங்கிக் கைவிட்டு குழைந்து கூத்தாடி
கும்பிட்டு மெய்வாய் பொத்திப்
பணிந்து போவோமா?
பலிக்கடாக்கள் ஆவோமா?

" WE DONT LIKE TO BE THE VICTIMS OF
THE VIOLENCE"

"எமது தமிழ் மண்ணில் படிப்பு கிட்டும் வரை
சாகும்வரை உண்ணாவிரதம் "

## இன்னுமொரு வெலிக்கடை

கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற இனக்கலவரத்தின் பின் இற்றைவரை ஐம்பதிற்கு மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் பலரும் வெலிக்கடையில் தான் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள். மீண்டும் ஒரு இனக்கலவரம் ஏற்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயின், முன்னர் நடந்தது போல் மீண்டும் ஒரு வெலிக்கடைக் கொலைக்களம் நடக்கக் கூடிய சூழ்நிலை வெலிக்கடையில் உருவாகியிருப்பதாகத் தெரிகிறது.

வெலிக்கடை ஒரு காசாப்புக்கடை அங்கு தமிழன் உயிரும், உடலும், உதிரமும் மலிந்த விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. ஐயோ! தமிழினமே உனக்கேன் இன்னும் ஏக்கம் கலையவில்லையோ?

## கல்பகே கப்ஸா அடிக்கிறார்

1977ம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து 400 சிங்கள மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமக்கு பாதுகாப்பில்லை எனக் கூறியபோது, தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களுக்குத் திருப்பி அழைக்கப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் எந்தவிதமான பாதிப்பும் இருக்கவில்லை. அவர்கள் தங்கியிருந்த வீடுகளின் சொந்தக்காரர்கள் அவர்களுக்கு ஒன்றும் நடக்காது எனக்கூறி போதிய பாதுகாப்புத் தருவதாக ஒப்புக் கொண்டிருந்த போதிலும், அப்போதைய யாழ்ப்பாண அரசாங்க அதிபரும், மற்றும் இங்கேயிருந்த அரசபடைகளும்தான் வற்புறுத்தி அவர்களை அழைத்துச் சென்றார்கள். போகும்போது அவர்களுக்கு பெருந்தன்மைமிக்க நமது பண்புள்ள தமிழர்கள் சாப்பாட்டுப் பார்சலும் கட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அங்கு போய் மூட்டிய தீயால் இலங்கைத் தீவு எரிந்தது.

இவ்வாறாக அன்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்தமை பிழை என்றும், தாம் அப்போது உயர்கல்வி அமைச்சின் செயலாளராக இருந்திருந்தால் இவ்வாறானதொரு நடவடிக்கையை, அதாவது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் படித்த சிங்கள மாணவர்களைத் திருப்பி அழைத்த அத்தகையதொரு நடவடிக்கையைத் தாம் ஒருபோதும் எடுத்திருக்க மாட்டேன் என்றும் திருவாளர் .கல்பகே அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார். ஆனால் இன்று நடந்தது என்ன? அந்தப் பிரமுகர் கல்பகேதான் உயர்கல்வி அமைச்சின் செயலாளராகவிருக்கிறார். ஆனால் மட்டக்களப்புப் பல்கலைக் கழகத்தில் தமக்குப் பாதுகாப்பில்லை என 40 சிங்கள மாணவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கும் மற்றப் பல்கலைக்கழகங்களுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மட்டக்களப்பிலும், சிங்கள மாணவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. பாதிப்பு ஏற்படாத சிங்கள மாணவர்களுக்கு அவர்களது கோரிக்கைகள் உடன் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் தமிழ் மாணவர்கள் கொலை செய்யப்பட்டும், தாக்கப்பட்டும் பெரும் பாதிப்பும் சொத்திழப்பும் ஏற்பட்டும் கூட தமக்குத் தமிழ்ப் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்து தருமாறு கேட்கின்ற போது அவர்களது கோரிக்கையில் உள்ள நியாயத்தன்மையைப் புரிந்துகொண்டு அவர்களது கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க மறுத்து அரசாங்கம் பிடிவாதமாக இருக்கிறது. கல்பகே அன்று அப்படிச் சொன்னார் இன்று இப்படிச் செய்கிறார். பேச்சு பல்லக்குத்தான், ஆனால் தம்பி மட்டும் எப்போதுமே கால்நடைதான், இதில் ஒன்றுக்கும் குறைவேயில்லை.

## விடுதலை அணி அஞ்சலி

தமிழீழ விடுதலை அணி 10.1.84 அன்று செவ்வாய்க்கிழமை தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது உயிர்நீத்த தியாகிகளுக்கு, வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னுள்ள அவர்களது சமாதியில் மலர்தூவி அஞ்சலி செலுத்திக் கொண்டது. அத்தோடு தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது அரச படையினரின் வெறியாட்டத்தினால் மரணமான திரு. அருளப்பு அவர்களின் குடும்பத்தினருக்கு உடுபுடவைகள் அன்பளிப்புச் செய்ததோடு, பணமுடிப்பும் வழங்கி அவர்களுக்கு ஆதரவும் தெரிவித்துள்ளது.

## ஸ்ரீலங்காவுக்கு பயங்கர ஆயுதங்கள்

ஸ்ரீலங்காவுக்கு பாகிஸ்தானிலிருந்து 500 கவசவண்டிகள் வந்துள்ளன. அத்துடன் வேறு பயங்கர ஆயுதங்களும் வந்துள்ளன. இலட்சக் கணக்கில் துப்பாக்கி குண்டுகளும், இரவிலே பார்த்துச் சுடக்கூடிய அதி சக்திவாய்ந்த துப்பாக்கிகளும், வெடிகுண்டுகளும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும், ராடர் கருவிகளும் ஸ்ரீலங்கா அரசின் கைகளில் உள்ளன. இவையாவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கேயுள்ளதாக தமிழீழ மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் குழு, அமெரிக்க ஜனாதிபதி றீகனுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சுவார்த்தை முழுமையடையாது

சர்வகட்சி மாநாடு ஸ்ரீ லங்காவில் நடைபெறுகிறதல்லவா? இது முதற்கட்டத்திலேயே குழப்பமடையும் போல் தெரிகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் விஷயத்தில் கூட்டணி இரகசியமாக உள்ளதாகவும், இதற்கு எதிர்ப்பாக அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் அல்பேட் எதிரிசிங்காவும், தொழிற்சங்கவாதி அசீஸ் அவர்களும், தொண்டமான் அவர்களும் இயங்குவதாக அறிகிறோம். இவ்விடயம் எப்படி முடியுமோ? இதனை விட தீர்வு காணப்பட உள்ளதாக கூறப்படும் ஏனைய விடயங்கள் இதோ:—

(1) வடக்கு, கிழக்கு பொலிசாரிடம் ஆயுதங்களுடன் அவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மாநில சபைகளில் இருக்கவேண்டும்.

(2) தமிழீழ பிரதேசங்களில் நடைபெறும் சிங்களக் குடியேற்றத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம்.

(3) தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுதல். (4) பயங்கரவாதத்தை ஒழித்தல்.

இவ்விடயங்களிலெல்லாம் சிங்களத் தலைவர்களுடன் ஐக்கியமான தீர்வு ஏற்படுமென்றும் இத்தீர்வின் மூலம் தமிழினத்தின் பிரச்சினைகள் தீருமென்றும் மக்கள் எதிர்பார்ப்பது எவ்வளவு முட்டாள்தனம்.

## பல்கலைக்கழக மாணவர் போராட்டம்

இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர் போராட்டம் தமிழீழ விடுதலையில் ஓர் புதிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்பதால், இப்போராட்டம் வெறும் மாணவர்களது போராட்டமாக இல்லாமல் மக்கள் போராட்டமாக முன்னெடுக்கப்படவேண்டும் எனவும், இப்போராட்டத்திற்கு ஆதரவாக சகல மதவழிபாட்டு தலங்களிலும் உண்ணாவிரதங்கள் நடாத்தப்படவேண்டுமெனவும் இவற்றை ஒழுங்குமுறைப்படி நடாத்துவதற்கு தமிழீழ விடுதலை அணி தனியாக ஒரு குழுவை நியமித்துள்ளது. இக்குழுவினருடன் சகலரும் ஒத்துழைத்து கட்டுப்பாடான முறையில் இப்போராட்டம் நடைபெற வழிசெய்யுமாறு தமிழீழ விடுதலை அணி மக்களைக் கோரியுள்ளது.

## தமிழீழ விடுதலை அணியின் அறிக்கை

தமிழீழ விடுதலைக்கு பலவேறு தீவிரவாத இயக்கங்கள் எம்மத்தியில் போராடிக் கொண்டிருக்கின்றன என்பது உண்மையாயினும், இவ் இயக்கங்களிடையே பொது வேலைத்திட்டம் ஒன்றை முன்வைத்து இணைந்து செயற்படும் ஒரு நிலை இன்னமும் ஏற்படாதது எமது துரதிஷ்டமே. இந்நிலையில், தீவிரவாதப் போக்கைக் கடைப்பிடிக்கின்ற (ஆயுதந் தாங்கிய போராட்டத்தில் ஈடுபடாவிடினும் ஒரு மக்கள் இயக்கம் என்ற முறையில்) தமிழீழ விடுதலை அணி இவ்வியக்கங்களிடையேயுள்ள முரண்பாடுகளுக்கு அப்பால் பொதுவான மக்கள் இயக்கமொன்றை கட்டி எழுப்பிக் கொண்டிருக்கிறது. இம் மக்கள் இயக்கமானது தீவிரவாத தமிழ் இளைஞர்களின் கருத்துக்களை பிரதிபலிக்கும் ஒரு இயக்கமாக விளங்கும் என்பதுடன் இளைஞர் இயக்கங்களை ஒன்றிணைத்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும். அதுமட்டுமல்ல, சகல மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இயக்கமாகவும், இளைஞர் இயக்கங்களிடையே சகலருடனும் பொதுவான ஓர் உறவை வளர்த்துக் கொள்ளும்.

இளைஞர் இயக்கங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதுதான் எமது தலையாய நோக்கம். அத்துடன் விடுதலைக்கு ஆதரவான கருத்துக்களை மக்களிடையே பரப்புதலும், அனைத்து மக்களையும் போராட்டத்தில் பங்குகொள்ளச் செய்வதுமாகும். தமிழீழ விடுதலைக்கு குறைந்தளக் கருத்துக்களையும், தமிழீழ விடுதலை அணி ஏற்காது. தமிழீழத்திற்கு போராடும் அனைத்து சக்திகளுக்கும் தமிழீழ விடுதலை அணி தனது நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும்.

இயக்கத்திலுள்ள சிலரது தனிப்பட்ட கருத்துக்களுக்கும் விடுதலை அணிக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்பதை தமிழீழ விடுதலை அணி தெரிவிக்கின்றது.

தீவிரவாத இயக்கங்கள் யாவும், மிகவும் ஒழுக்கக் கட்டுப்பாட்டுடனும், விடுதலை ஒன்றையே முன்வைத்தும், மக்களுக்கு அவசியமற்ற சிரமங்களை ஏற்படுத்தாமலும், ஸ்ரீலங்கா அரசைத் தீவிரமாக எதிர்ப்பனவாகவும் அமைவதன் மூலம் தீவிரவாத இயக்கங்களை ஒன்றிணைக்க வழியேற்படுமென தமிழீழ விடுதலை அணி கருதுகிறது.

இன்று தமிழ் மக்களிடையே இயக்கங்களின் பெயரால் தனிப்பட்ட மக்களின் சொத்துக்களை இனவிரோத சக்திகள் சூறையாடுவதை தமிழீழ விடுதலை அணி வன்மையாகக் கண்டிப்பதுடன் இவர்களைப் பொதுமக்கள் இனங்கண்டு கொள்ள வேண்டுமெனவும் தமிழீழ விடுதலை அணி தெரிவிக்கிறது.

இவ்விதழை மற்றவர்களுக்கும் கொடுத்து உதவவும்.

தமிழின விடுதலை வெளியீட்டுக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org